ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2456/47- 2025 ඔක්තෝබර් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.10.02

2456/47 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (2ஈ) பிரிவின் கீழ் செய்யப்படும் விளம்பரம்**

**உத்தேச 107 அலகுகள் கொண்ட அடுக்கு மாடி வீட்டுக் கட்டடம் மற்றும் அடுக்கு மாடியல்லாத 17 வில்லா வீடுகள் அடங்கிய செயற்றிட்டம்<br>முதில்லகஹவத்த, குடாவஸ்கடுவ, களுத்துறை<br>சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை.**

1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக பத்தரமுல்ல, பன்னிபிட்டிய வீதி, இலக்கம் 1087 எனும் முகவரியுடைய ஹோம்லேண்ட் ஸ்கைலைன் தனியார் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட களுத்துறை, குடாவஸ்கடுவ, முதில்லகஹவத்த எனுமிடத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள 107 அலகுகள் கொண்ட அடுக்கு மாடி வீட்டுக் கட்டடம் மற்றும் அடுக்கு மாடியல்லாத 17 வில்லா வீடுகள் அடங்கிய செயற்றிட்டத்திற்கான சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்கள் பார்வைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாளாந்தம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரை 2025.10.02 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை தினங்கள் தவிர)

அதற்கு மேலதிகமாக, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www. coastal.gov.lk ஊடாக அவ்வறிக்கை மூன்று மொழிகளிலும் பார்வைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

103 - G 45476 - 24 (2025/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், 4 ஆம் மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10
2. மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்லை
3. மாவட்ட செயலகம், களுத்துறை
4. பிரதேச செயலகம், களுத்துறை
5. பரதேச சபை, களுத்துறை
6. மத்திய சுற்றாடல் அதிகாரசபை, மாவட்ட அலுவலகம், களுத்துறை
7. கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், மாவட்ட அலுவலகம், களுத்துறை
8. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், பிரதேச அலுவலகம், மொரட்டு மோதர, மொரட்டுவை.

இந்த உத்தேச திட்டத்தினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றிய சுற்றுச் சுழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தொடர்பான பொதுமக்கள் அபிப்பிராயங்களை 2025.10.02 ஆந் திகதி முதல் 30 நாட்களினுள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்தில் சமர்ப்பிக்குமாறு தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் பீ. பி. டர்னி பிரதீப் குமார
பணிப்பாளர் நாயகம்
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவம்

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்
புதிய செயலகம், 4 ஆம் மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10.

தொலைபேசி இலக்கம் : 011 - 2449754, 011 - 2387922, 011 - 2449197
பெக்ஸ் இலக்கம் : 011 - 2438005, 011 - 2472623
ஈ மெயில் : dg.ccd.lk@gmail.com

EOG 10 - 0008